OS 213/2022

வா.சா.1 ஆறுமுகம் த/பெ தயாளன்

நாள் 16.09.2025

**<u>3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் அபிராமி என்பவரிடம் இருந்து இடம் கிரையம் செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். வழக்கு சொத்து எங்கு இருக்கிறது என்றால் துந்தரீகம்பட்டு கிராமத்தில் சித்தேரி பஞ்சாயத்தில் உள்ளது. கிரைய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளதா என்றால் ஆரணி ரிஜிஸ்டர் ஆபிசில் போடப்பட்டுள்ளது. கிரைய ஒப்பந்தம் எந்த தேதியில் போடப்பட்டது என்றால் 20.11.2019ம் தேதி போடப்பட்டது. கிரையத்தொகை எவ்வளவு பேசப்பட்டது என்றால் ரூ. 3 லட்சம் பேசப்பட்டது முன்பணமாக ரூ.2,50,000/- கொடுத்தேன் மீதி தொகை ரூ.50,000/- கொடுக்க வேண்டும். இறந்த 1ம் பிரதிவாதி வாரிசுகளான 3, 4 பிரதிவாதிகளுக்கு ஒப்பந்தம் போடப்பட்டதா என்றால் இல்லை. தாவா வழக்கை 3, 4 பிரதிவாதிகளான இளவர்களுக்கு எதிராக தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. இளவர்களின் பாக சொத்தை தாவா கிரைய ஒப்பந்தம் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.